வணக்கம்
ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்- ரோஷ்னா காசிம்

தேதி 20.09.2026 நேரம் மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

புதுடெல்லியில் நடைபெறும் சுற்றுச் சூழலின் எதிர்காலம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த தேசிய மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, உரையாற்றுகிறார்.

ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்றுள்ள இந்திய குழுவினருக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளர்.

மானிய விலை எல்பிஜி சிலிண்டர்களை பெறுவதற்கு, வரும் அக்டோபர் மாதம் 1ஆம் தேதி முதல், ஆதார் அடையாள பயோ மெட்ரிக் கட்டாயம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலைகள் இன்று ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட்டன.

---

## முர்மு (10)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று மாலை புதுடெல்லியில் நடைபெறும் சுற்றுச் சூழலின் எதிர்காலம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த தேசிய மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் உரையாற்றுகிறார். 2 நாள் நடைபெறும் இம்மாநாட்டை, தேசிய பசுமை தீர்ப்பாயம் ஏற்பாடு செய்துள்ளது. நிகழ்ச்சியில் மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால், உச்சநீதிமன்ற நீதிபதி திரு. பி.வி. நாகரத்னா, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவர் நீதிபதி பிரகாஷ் ஸ்ரீவத்சவா மற்றும் பலர் கலந்து கொள்ள உள்ளனர். மாநாட்டில், பருவநிலை மாற்றம் குறித்து அறிவியல் சார்ந்த அறிஞர்கள் பலர் தங்களது அனுபவங்களை எடுத்துக் கூறினர்.

---

## ஜப்பான் (10)

ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் குழு பிரிவிலும், மகளிர் தனிநபர் பிரிவிலும், இந்தியா, வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது. துப்பாக்கி சுடும் பிரிவில், இளவேனில் வாலறிவன், விதர்ஷா கே வினோத், சோனம் உத்தம் மஸ்கர் ஆகியோர் அடங்கிய குழுவிற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்திய குழுவினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.

நரேந்திர மோடி, வாழ்த்து தெரிவித்துள்ளார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

---------------------------

## செமிகான் மாநாடு (9)

புதுடெல்லியில் 3 நாட்கள் நடைபெற்ற செமிகான் இந்தியா-2026 மாநாடு நிறைவடைந்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், 52 நாடுகளைச் சேர்ந்த 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 150க்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் உரையாற்றினர். ஜப்பான், தென்கொரியா, மலேசியா, நெதர்லாந்து, சிங்கப்பூர், மற்றும், ஸ்வீடன் ஆகிய நாடுகளின் அரங்கங்களும் இந்த மாநாட்டில் இடம்பெற்றன. 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். 3 நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், 56 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

---------------------------

## அஷ்வினி வைஷ்ணவ் (11)

சிப்கள் தயாரிப்பில், உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செமிகண்டக்டர் வடிவமைப்பு, ஒவ்வொரு பிரிவிலும் ஏராளமான முயற்சிகள் தேவைப்படும் தொழிலாக இது அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த தொழிலை மேம்படுத்த, மத்திய-மாநில அரசுகள், செமிகண்டக்டர் தொழில் துறை ஆகியவை இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார். இணைய வழித் தாக்குதல்களை சமாளிக்க செமி கண்டக்டர் துறை தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்தியாவை விரும்பாத சில நாடுகள் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடம் என்றும் அவர் தெரிவித்தார்.

---------------------------

## சேவா சங்கல்ப் 1 (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது 25 ஆண்டு கால பொது சேவையை நிறைவு செய்கிறார். அவர் தனது மக்களே தேச சேவை என்ற தாரக மந்திரத்தால் தனது தளராத அர்ப்பணிப்பால் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார். அவரது தொலை நோக்குப் பார்வையில் வருகிற 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய அரசு கடுமையாக உழைத்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக வலுவூட்டல் மூலம் இந்த அர்ப்பணிப்பு, மக்களின் வாழ்க்கையை மாற்றி வருகிறது. இது தொடர்பாக நமது சிறப்புத் தொடரில், இந்த தொலை நோக்குப் பார்வை எவ்வாறு செயலாக மாற்றப்பட்டுள்ளது என காண்போம்.

## சேவா சங்கல்ப் 2 (18)

கோவிட் பெருந்தொற்றின் போது, வியாபாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், தெருவோர வியாபாரிகளுக்காக பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதற்காக தொடங்கப்பட்ட திட்டம்தான் பிரதமர் ஸ்வாநிதித் திட்டம். தெருவோர வியாபாரிகளுக்கு பிணையில்லா கடன் வழங்கும் திட்டமான ஸ்வாநிதி திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் 6 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துள்ளது. இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், பிணையில்லா கடன் பெறுவதை உறுதி செய்வதன் மூலம் தெருவோர வியாபாரிகளின் வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நம்பிக்கை, கண்ணியம், அதிகாரமளித்தலின் அடையாளமாக இத்திட்டம் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் பயனாளிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ள பிரதமர், வியாபாரிகளின் உறுதிபாடும், வணிகமும், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தட்டும் என குறிப்பிட்டுள்ளார். தெருவோர வியாபாரிகளுக்கு, இத்திட்டத்தின் மூலம் பிணையில்லா கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வியாபாரிகளுக்கு முதல் தவணையாக 15 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படும். ஒருவருட காலத்திற்குள் இந்த முழு

## சேவா சங்கல்ப் 3 (11)

தொகையை செலுத்திய பின்னர், 2ஆவது தவணையாக 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. அதனை 18 மாத கால தவணைக்குள் செலுத்திய பின்னர், 50 ஆயிரம் ரூபாய் 3ஆவது தவணையாக வழங்கப்படுகிறது. இந்த கடனை சரியாக செலுத்தும் பட்சத்தில், பயனாளிகளின் வங்கிக் கணக்கில், வட்டி மானியமாக 7 சதவிகிதம் அளிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆகஸ்ட் 2026 வரை, இத்திட்டத்தில் 78 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். அவர்களுக்கு இதுவரை, 18 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், இதுவரை 30 லட்சத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகள் 2ஆம் கட்ட தவணைக்கும், 8.5 லட்சத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகள், 3ஆம் கட்ட தவணைக்கும் முன்னேறி உள்ளதாக, தரவுகள் தெரிவிக்கின்றன.

---------------------------

## மோடி - பணி ஆணை(15)

மத்திய அரசின் வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம், 2 கோடி இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டு இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் நேற்று நாடு முழுவதும் மத்திய அரசு பணிகளில் புதிதாக இணைய உள்ள 51ஆயிரம் பேருக்கு, பணி நியமன ஆணைகளை காணொளிக் காட்சி மூலம் வழங்கினார். ரோஜ்கர் மேளா என்னும் நிகழ்ச்சியில் பேசிய அவர், உலகில் 40 நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக

ஒப்பந்தத்தை மேற்கொண்டு இருப்பதாகவும், இந்த ஒப்பந்தங்களால் இந்திய இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும் என்று தெரிவித்தார். இந்தியாவில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பெரிய நகரங்களில் மட்டுமல்லாது, தற்போது புதிய நகரங்களிலும் உருவாகி வருவதாக, பிரதமர் குறிப்பிட்டார். இளைஞர்களுக்கு போதிய அளவில் தனியார் துறையில் வேலை வாய்ப்புகள் கிடைக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். பிரதமர் விக்சித் பாரத் யோஜனா திட்டம் மூலம் சுமார் 2 கோடி இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பு ஏற்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

---------------------------

## முருகன்-ரோஜ்கர் மே ா (10)

அனைத்து துறைகளிலும் இளைஞர்கள் சாதிக்க மேக் இன் இண்டியா போன்ற திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு. எல் முருகன் தெரிவித்துள்ளார். சென்னையில் நடைபெற்ற ரோஜ்கர் மேளா நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், தற்போது நாடு முழுவதும் நடைபெறும் முகாம் மூலம் 51 ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்துள்ளதாக தெரிவித்தார். இதுவரை, 12 லட்சம் பேர் இந்த வேலை வாய்ப்பு முகாம் மூலம் பயனடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் நவோதயா பள்ளிகளுக்கு மாநில அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என குறிப்பிட்டார்.

---------------------------

## விநாயகர் சிலை கரைப்பு 1 (10)

புதுச்சேரியில், விநாயகர் சதுர்த்தி விழா கடந்த 14ஆம் தேதி கொண்டாடப்பட்டது. விழாவில், 5 அடி விநாயகர் முதல், 21 அடி வரையிலான சிலைகளை பிரதிஷ்டை செய்து மக்கள் வழிபட்டனர். சாரம் அவ்வைத் திடலில் விநாயகர் சதுர்த்தி பேரவையின் சார்பில் 21 அடி உயரத்தில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு நாள்தோறும் பூஜைகள்-கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிராமப்புறங்களில் விநாயகர் சிலைகள் கடந்த 16ஆம் தேதி கரைக்கப்பட்டன. இந்நிலையில் 2ஆம் கட்டமாக புதுச்சேரி நகரப் பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் இன்று ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு, கடலில் கரைக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு.....

(வாய்ஸ்)

## விநாயகர் சிலை கரைப்பு 2 (14)

புதுச்சேரி நகரப் பகுதிகளில் இன்று காலை முதலே, வைத்திக்குப்பம், சாரம், முத்தியால்பேட்டை, லாஸ்பேட்டை, பெரியார் நகர், உப்பளம், முதலியார்பேட்டை, தேங்காந்திட்டு, அரியாங்குப்பம், மூலக்குளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்து விநாயகர் சிலைகள், சாரம் அவ்வை திடலுக்கு வாகனத்தில் கொண்டு வரப்பட்டன. தமிழக பகுதியான வானூர், செஞ்சி, மதுரப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகளும் வாகனங்களில் கொண்டு வரப்பட்டன. இந்த சிலைகளுக்கு சாரம் அவ்வை திடலில் சிறப்பு

வழிபாடுகள் நடத்தப்பட்டு, மேளதாளங்கள் முழங்க, புதுச்சேரி நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் வழியாக கடற்கரை சாலையை சென்றடைந்தது. தொடர்ந்து கடற்கரையில் சிலைகளுக்கு பூஜை செய்யப்பட்டு கடலில் கரைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதற்காக கடற்கரை சாலையில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

---------------------------

## எல்பிஜி-மானியம் (13)

மானிய விலை எல்பிஜி சிலிண்டர்களை பெறுவதற்கு, வரும் அக்டோபர் மாதம் 1ஆம் தேதி முதல், ஆதார் அடையாள பயோ மெட்ரிக் கட்டாயம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒழுங்குப்படுத்தப்பட்ட சில்லறை விற்பனையில், நுகர்வோர் சிலிண்டர்களை பெறுவதற்கு, ஆதார் இணைப்பு பயோ மெட்ரிக் அவசியம் என்று தெரிவித்துள்ளது. இதன்மூலம், தகுதியுள்ள உண்மையான நுகர்வோர்களுக்கு மானிய விலையில் கிடைக்கும் சிலிண்டர்கள் உறுதி செய்யப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. மானிய விலை சிலிண்டர்களை, வணிகப் பயன்பாட்டிற்கு மாற்றுவதை தவிர்க்க இது வகை செய்யும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஆதார் பயோ மெட்ரிக் இணைப்பை இதுவரை 27 கோடியே 43 லட்சம் நுகர்வோர் பதிவு செய்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------------------

## மோடி-பத்திரிக்கையார் (16)

பத்திரிக்கையாளர் பாயல் மேத்தாவின் திடீர் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், கள நிலவரங்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, தேசிய பிரச்சனைகள் குறித்த செய்திகளை வெளியிட்டு வந்த ஒரு கடின உழைப்பாளி அவர் என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார். அவரது பணிக்கு அப்பாற்பட்டு அவர், பலரின் வாழ்வில் ஏற்படுத்திய கருணை மற்றும் அன்பிற்காக என்றும் நினைவு கூறப்படுவார் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிக்கையாளர் பாயல் மேத்தாவின் மறைவுக்கு, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இரங்கல் தெரிவித்துள்ளார். செய்தி சேகரிப்பில் அவரது அர்ப்பணிப்பு முன்மாதிரியாக இருந்தது என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், பாயல் மேத்தா ஒரு கடின உழைப்பாளி என்றும், அர்ப்பணிப்பு கொண்ட பத்திரிக்கையாளர் என்றும், அவர் நாடாளுமன்ற நிகழ்வுகளை மிகுந்த அர்ப்பணிப்புடனும், திறமையுடனும் செய்தியாக வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

---------------------------

## ரயில் (9)

நாட்டில் பாதுகாப்பான ரயில் பயணத்தை உறுதி செய்யும் வகையில், கவச் பாதுகாப்புத் திட்டத்தின் 4.0 பதிப்பிற்கு, ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. ரயில் தடங்களில், அபாயகரமான நிலையில் சிக்னலை கடந்து ரயில் செல்வதை தடுக்க, உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டுள்ள தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு கவச் திட்டமாகும். இதை ரயில்வே அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. இந்த பாதுகாப்பு அமைப்பு தேவைப்படும் போது ரயில்களின் பிரேக்குகளை கட்டுப்படுத்தி, பாதுகாப்பான பயணத்திற்கு வகை செய்கிறது. இந்நிலையில் இந்த கவச் திட்டத்தின் 4.0 திட்டத்திற்கு, இந்திய ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

---------------------------

## அஜித் தோவல் (9)

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, அடுத்த 20 ஆண்டுகளில் 38 டரில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் நம்பிக்கை தெரிவித்துள்ளார். உத்தரகண்ட் மாநிலத்தில் நடைபெற்ற ஐஐடி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசிய அவர், இந்தியாவில் தற்போது மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருவதாகவும், நமது நாடு, மகத்தான எதிர்காலத்தை நோக்கி பயணித்து வருவதாகவும் குறிப்பிட்டார். இந்தியாவில் தற்போது உள்நாட்டு உற்பத்தி 4.15 ட்ரில்லியன் டாலராகும் என்றும், இது அடுத்த 20 ஆண்டுகளில், 38 டிரில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

---------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

புதுடெல்லியில் நடைபெறும் சுற்றுச் சூழலின் எதிர்காலம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த தேசிய மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, உரையாற்றுகிறார்.

ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்றுள்ள இந்திய குழுவினருக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளர்.

மானிய விலை எல்பிஜி சிலிண்டர்களை பெறுவதற்கு, வரும் அக்டோபர் மாதம் 1ஆம் தேதி முதல், ஆதார் அடையாள பயோ மெட்ரிக் கட்டாயம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலைகள் இன்று ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட்டன.